[2008 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *209*, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

209—

கட்டட வசதி

***22976—திரு. செ. சின்னச்சாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, பன்னாங்கொம்பு கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி, பன்னாங்கொம்பு கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி.

திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியம், கருப்பூர், புத்தாநத்தம், பன்னப்பட்டி, பொய்கைப்பட்டி, சாம்பட்டி, புடங்குப்பட்டி, எப். கீழையூர், சூளியாபட்டி, வடுகப்பட்டி, மலையடிப்பட்டி, தொப்பம்பட்டி, முண்டிப்பட்டி, எப். பெரியபட்டி போன்ற 21 பஞ்சாயத்துகளை உள்ளடக்கியிருக்கிற மணப்பாறை ஒன்றியத்திற்கு ஒரே ஒரு கால்நடை மருத்துவமனை மட்டும்தான் பன்னாங்கொம்பிலே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதைப்போல, துணை நிலையங்கள் என்று எடுத்துக்கொண்டால், புத்தானத்தத்திலே ஒன்றும், மறவனூரிலே ஒன்றும், எப். கீழையூரிலே ஒன்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், எப். கீழையூரிலே இருக்கிற அந்தத் துணை மையத்திலே ஆய்வாளர் பணியிடம் காலியாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே இந்த ஒன்றியத்திற்கு

2008 மே 6]

உட்பட்டிருக்கிற, 500 குக்கிராமங்களை உள்ளடக்கியிருக்கிற பகுதிக்கு ஒரு மருத்துவமனைதான் இருக்கிறது. பன்னாங்கொம்பு பஸ் நிலைய சாலையோரமாக இருக்கிற துணை நிலையத்திலே அந்த மருத்துவமனை இயங்கிக்கொண்டிருக்கிறது. எனவே, துணை நிலையத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற அந்தக் கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நிலம் கேட்கப்பட்டு, அந்த நிலமும் பஞ்சாயத்துத் தீர்மானம்மூலமாக அரசுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கால்நடைத் துறையினுடைய மாவட்ட நிருவாகம் இடத்தைப் பார்வையிட்டிருக்கிறது. எனவே, இந்தச் சூழ்நிலையிலே ஏறத்தாழ அந்தப் பகுதியிலே இருக்கிற பசுக்கள் 34,000-க்கும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. சின்னச்சாமி, கட்டடம் கட்டப்படுமா, இல்லையா என்பதுதான் கேள்வி. நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. செ. சின்னச்சாமி: பசுக்கள், எருமைகள், வெள்ளாடுகள், கோழிகள் என்று எடுத்துக்கொண்டால், ஏறக்குறைய மூன்று இலட்சத்திற்கும் அதிகமான கால்நடைகள் அந்தப் பகுதிகளிலே இருக்கின்றன. அந்தக் கால்நடைகளினுடைய நலன் கருதி, பன்னாங்கொம்பிலே ஒரு புதிய கால்நடை மருத்துவமனை கட்டடத்தைக் கட்டித் தர அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி பன்னாங்கொம்பு கால்நடை மருந்தகம் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலேதான் 2000-லே தொடங்கப்பட்ட மருந்தகம் ஆகும். அப்பொழுதே, அது D.R.D.A., அதாவது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் கட்டப்பட்ட சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இப்பொழுது கூடுதல் கட்டடம் வேண்டுமென்றால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும்பொழுது நிச்சயமாக கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி.

திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசு கால்நடை மருத்துவமனை அல்ல. துணை சுகாதார நிலையத்திற்காகக் கட்டப்பட்ட சிறிய கட்டடம். அதிலே மருத்துவம் செய்கின்ற வசதி வாய்ப்புகள் குறைவாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, அது சாலையோரமாக, பஸ் நிற்கின்ற இடத்திலே இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, அங்கே கால்நடைகளைப் பிடித்து வரும்பொழுது வாகனத்தைக் கண்டு அந்தக் கால்நடைகள் எல்லாம் மிரண்டுபோய் கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடுகிற சூழ்நிலை இருக்கிறது. என்னுடைய வீட்டின் அருகிலேயே இருக்கிறது. தினந்தோறும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனவே, கருணை உள்ளத்தோடு, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையிலே ஈவு இரக்கம் காட்டாமல், வாய் பேசாத கால்நடைகள் என்பதால், ஓரங்கட்டாமல், தயவு செய்து அந்த வாய் பேசாதக் கால்நடைகளை எண்ணத்திலேகொண்டு புதிய கட்டடத்தைக் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் வாயிலாக கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, நிதியை ஒதுக்கீடு செய்ய முன்வராததால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை வரும் நிதியாண்டில் அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

210—

பள்ளி மற்றும் விடுதி

***1464—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—